# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 8

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

01. முத்தமிழின் ஒரு பிரிவாக விளங்குவது

அ) நடனம் ஆ) சிற்பம் இ) நாடகம் ஈ) நாட்டியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

02. காட்டுமல்லிகை பூக்குங் காலம்

அ) கார்காலம் ஆ) கோடைகாலம்

இ) இலையுதிர்காலம் ஈ) இலைதளிர்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

03. '**வலம்படுவாய்வாள் ஏந்தி....** என்ற பாடல் வரி இடம்பெற்ற நூல்

அ) அகநானூறு ஆ) புறநானூறு

இ) குறுந்தொகை ஈ) கலித்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

04. உள்ளம் தூய்மையடைவது

அ) பொய்யால் ஆ) வாய்மையால்

இ) நீரால் ஈ) அன்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

05. **ஆயர்** என்ற சொல்குறிப்பது

அ) உழவரை ஆ) மீனவரை இ) வணிகரை ஈ) இடையரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

06. ஒன்று இல்லாத போதுதான் அதன் உயர்வு தெரியும் என்னும் பொருளைக் குறிக்கும் பழமொழி

அ) சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும்.

ஆ) நிழலின் அருமை வெய்யிலில் தெரியும்.

இ) தூரத்துத் தண்ணீர் ஆபத்திற்குதவாது.

ஈ) கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலையாதே.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

07. நிகழ்ச்சியொன்றை மேடையேற்றுவதற்கு முன்பு நடத்திப் பார்ப்பது

அ) அரங்கேற்றம் ஆ) வெள்ளோட்டம் இ) ஒத்திகை ஈ) முற்றுகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

08. நட்புக்கொள்ளல் என்பதைக் குறிக்கும் சொல்

அ) நட்டல் ஆ) நகுதல் இ) நவில்தல் ஈ) நயத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

09. கண்டது என்ற வினைமுற்றின் வினையடி

அ) கண்டு ஆ) கண்ட இ) காண் ஈ) கண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. மயில் அகவும் அதுபோல் ஆந்தை

அ) அலறும் ஆ) பேசும் இ) கீச்சிடும் ஈ) கரையும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பின்வருவனவற்றுள் வேறுபட்ட பொருளைத் தரும் சொல்

அ) உள்ளம் ஆ) மனம் இ) புறம் ஈ) அகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. தன் பாட்டுத்திறத்தால் பெண்களுக்குப் பெருமையும் விடுதலையும் பெற்றுத்தந்தவர்

அ) பாரதியார் ஆ) கபிலர் இ) கம்பர் ஈ) புகழேந்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. '**கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்......** என்ற பாடலைப்பாடியவர்

அ) காளமேகம் ஆ) மோசிகீரனார்

இ) உருத்திரமூர்த்தி ஈ) கணியன் பூங்குன்றன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. அடக்கமின்றிப் பேசுதலைக் குறிக்கும் மரபுத்தொடர்

அ) தோள்கொடுத்தல் ஆ) ஆழம்பார்த்தல்

இ) வாய்காட்டல் ஈ) அள்ளிஇறைத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. **'எம் தமிழர் மூதாதை ! எம் தமிழர் பெருமான்'!** என்று பாவேந்தரால் போற்றப்பட்ட மன்னன்

அ) எல்லாளன் ஆ) இராவணன்
இ) சங்கிலியன் ஈ) கயிலைவன்னியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. அஞ்சி என்ற பெயர்கொண்டபோதும் அஞ்சாத வேங்கையென வாழ்ந்த மன்னன்

அ) சேரமான் ஆ) அதியர்மான் இ) பாரி ஈ) குமணன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. ஆறாம் வேற்றுமை உருபு

அ) ஐ ஆ) கு இ) ஆல் ஈ) அது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. பண்டாரவன்னியனின் படையணிகள் முல்லைத்தீவில் ஆங்கிலேயரின் கோட்டையைத் தாக்கி அழித்த ஆண்டு

அ) 1803 ஆ) 1815 இ) 1833 ஈ) 1811

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. அம்மாவும் பிள்ளைகளும் ________________ மகிழ்ந்தனர்.

அ) கூடிக்குலாவி ஆ) முட்டிமோதி
இ) சுற்றும்முற்றும் ஈ) சீருஞ்சிறப்பும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. இறந்தகால இடைநிலைகளில் ஒன்று

அ) கிறு ஆ) ட் இ) ப் ஈ கின்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. இலங்கையை ஆண்ட இறுதிச் சோழமன்னன்

அ) குலோத்துங்கசோழன் ஆ) இராசராசசோழன்
இ) பராந்தகசோழன் ஈ) இராசேந்திரசோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. வயல்கள் ________________ எனக் காட்சி அளித்தன.

அ) கன்னங்கரிய ஆ) பென்னம்பெரிய
இ) பச்சைப்பசேல் ஈ) செக்கச்செவேல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. ஐரோப்பியர் இலங்கைக்கு வந்தபோது அங்கு இருந்த அரசுகளின் எண்ணிக்கை

அ) இரண்டு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) நான்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. இசுலாமிய நெறி இலக்கியங்களில் ஒன்று

அ) தேம்பாவணி ஆ) திருவருட்பா
இ) சீறாப்புராணம் ஈ) இயேசுகாவியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பாட்டி எந்நேரமும் ________________ என்று பேசிக்கொண்டிருப்பார்.

அ) கணகண ஆ) தொணதொண இ) நறநற ஈ) பளபள

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. தாயகத்தில் இருந்து எப்போது வந்தீர்கள்? இச்சொல்லியத்தில் இடம் பெற்றுள்ள தோன்றா எழுவாய்

அ) நீ ஆ) அவர்கள் இ) நீங்கள் ஈ) நாம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. குலசேகரம்வைரமுத்து என்னும் இயற்பெயர் கொண்ட மன்னன்

அ) கயிலைவன்னியன் ஆ) பண்டாரவன்னியன்
இ) காக்கைவன்னியன் ஈ) நரசிங்கவன்னியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. பின்வருவனவற்றுள் வல்லின மெய்எழுத்து அல்லாதது

அ) க் ஆ) ஞ் இ) த் ஈ) ப்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. யானையின் இளையது கன்றுபோல் அணிலின் இளையது

அ) கன்று ஆ) குட்டி இ) பிள்ளை ஈ) பறழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. கைலாயமாலை என்னும் யாழ்ப்பாண வரலாற்று நூலை எழுதியவர்

அ) சின்னத்தம்பிப்புலவர் ஆ) சோமசுந்தரப்புலவர்
இ) விபுலாநந்த அடிகள் ஈ) முத்துராயக்கவிராயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

கற்கால மாந்தன் வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்டான். இயற்கையின் சீற்றத்திற்கும் கொடிய காட்டு விலங்குகளின் தாக்குதலுக்கும் அவன் இலக்கானான். அக்காலப் பகுதியின் தொடக்கத்தில் அவன் கல்லை உடைத்துக் கரடுமுரடான கருவிகளைச் செய்தான். விலங்குகளை வேட்டையாடி அதன் இறைச்சியை உணவாக உட்கொண்டான். விலங்குகளின் பல், எலும்பு, மருப்பு போன்றவற்றையும் கருவிகளாகப் பயன்படுத்தினான். கற்கால மாந்தன் குகைகளில் வாழ்ந்தான். விலங்கின் தோலை ஆடையாக உடுத்திக் கொண்டான். கற்களை ஒன்றுடன் ஒன்று உரசி நெருப்பைக் கண்டுபிடித்தான். இக் கண்டுபிடிப்பு அவன் வாழ்க்கையில் சில மாற்றங்களை ஏற்படுத்தியது. இறைச்சியைப் பச்சையாக உண்ட மாந்தன் அதனை நெருப்பில் வாட்டி உண்ணத் தொடங்கினான். கற்களை ஒன்றுடன் ஒன்று உரசி நெருப்பைக் கண்டுபிடித்தான். நெருப்பின் உதவியால் காட்டு விலங்குகளை விரட்டித் தன்னை அவற்றிடமிருந்து காப்பாற்றிக் கொண்டான்.

1. கற்கால மாந்தன் எதன் உதவியால் காட்டு விலங்குகளை விரட்டினான்?

______________________________

2. அவன் எவற்றைக் கருவிகளாகப் பயன்படுத்தினான்?

______________________________

______________________________

3. கற்கால மாந்தன் கற்களை ஒன்றுடன் ஒன்று உரசி எதைக் கண்டு பிடித்தான்?

______________________________

______________________________

4. அவன் எவற்றின் தாக்குதலுக்கு இலக்கானான்?

______________________________

______________________________

5. குகைகளில் வாழ்ந்த மாந்தன் யார்?

______________________________

______________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழில் - ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. **"கொல்லைகள் எங்கும் கண்டதில்லையே உனைத்தம் வீட்டின் எல்லைக்கு வெளியே வைத்தார் இவ்வூரார்"** இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

2. மும்முடிச் சோழமண்டலம் என அழைக்கப்பட்ட நாடு எது?

3. இறப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு யாரால் துன்பம் ஏற்படுவதாக நாட்டார் பாடலில் கூறப்படுகிறது?

4. போலிப் புலவர்களைக் கண்டால் அஞ்சாது இழித்துப் பாடிய புலவர் யார்?

5. வரலாற்றுப் புகழ்பூத்த இரு வன்னி மன்னர்களின் பெயர்களைத் தருக.

6. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பாடலைப் பாடியவர் யார்?

7. ***முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து***
   ***அகம்நக நட்பது நட்பு***
   இக்குறளின் பொருளைத் தருக?

புள்ளிகள் 10

4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை முழுமை ஆக்குவோம்.

# நட்பு

| | | | | |
|---|---|---|---|---|
| இருந்தால் | சென்று | உள்ளமும் | பிரியாது | மனதுடன் |

உறவுகள் அனைத்திலும் உயர்ந்தது நட்பு

உண்மையாய் ______________ அது சிறப்பு

உயிரையும் கொடுக்கத் துணியும் நட்பு

உதடும் ______________ சிரிப்பது சிறப்பு

நண்பனின் தவறைக் கடிவது நட்பு

நாளும் ______________ இருப்பது சிறப்பு

துன்பத்திலும் இணைந்திருப்பது நட்பு

தூய ______________ பழகுவது சிறப்பு

விரைந்து ______________ உதவுவது நட்பு

விடியலுக்காய் சேர்ந்து உழைப்பது சிறப்பு

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. சொல்லிய உறுப்புகள் அனைத்தும் இடம் பெறுமாறு ஒரு சொல்லியம் எழுதுக.

2. கீழே தரப்பட்டுள்ள வினையடிகளைப் பெயரெச்சமாகவும் வினையெச்சமாகவும் மாற்றி எழுதுக.

| வினையடி | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|
| பார் | | |
| தேடு | | |
| செய் | | |

3. தொழிலாகுபெயர், இடவாகுபெயர் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு எடுத்துக் காட்டுத் தருக.

தொழிலாகுபெயர் :-

இடவாகுபெயர் :-

4. பின்வரும் மரபுத் தொடர்களுக்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

இரட்டைக்கிளவி :-

அடுக்குத் தொடர் :-

இணைமொழி :-

5. போவான் என்ற வினை முற்றின் வினையடி, இடைநிலை, விகுதி என்பவற்றைத் தருக.

வினையடி :-

இடைநிலை :-

விகுதி :-

புள்ளிகள் 15

6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

My hobbies are reading books, playing with my friends, watching television, playing games in the computer etc.We must engage our free time on hobbies. This will give us knowledge and happiness.

Mine fritidsaktiviteter er at læse bøger, at lege med vennerne, at se fjernsyn, at spille computerspil og meget mere. Vi burde alle lave noget fritidsaktiviteter, når vi har tid. Disse kan give os glæde og viden.

I miei passatempi sono leggere libri, giocare con gli amici, guardare la televisione, giocare giochi/videogames al computer. Tutto ciò mi darà felicità e conoscenza.

Mijn hobby's zijn het lezen van boeken, met vrienden spelen, televisie kijken, spelletjes spelen op de computer etc. We moeten onze vrije tijd besteden aan hobby's. Dit zal ons kennis en blijheid geven.

Mina hobbyer är att läsa böcker, leka med vänner, kolla på TV, spela spel på datorn osv. På fritiden måste vi engagera oss i hobbyer. Detta ger oss glädje och kunskap

Mine hobbier er lesing, leke med mine venner, se på TV, spille spill på datamaskinen etc. Vi må engasjere oss med hobbier i fritiden. Dette vil gi oss kunnskap og glede.

Meine Hobbys sind Bücher lesen, mit Freunden spielen, fernsehen, mit Computerspiele spielen und ähnliche. Wenn wir Zeit finden, sollten wir uns mit Hobbys beschäftigen. Dies gibt uns Wissen und Freude.

Mes loisirs sont lire des livres, jouer avec mes amis, regarder la télé, jouer sur l'ordinateur etc... . Lorsque nous avons du temps libre, nous devons passer du temps sur nos loisirs, cela peut nous rendre heureux et c'est aussi un savoir.

புள்ளிகள் 05

7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

☆ காளமேகப்புலவர்

☆ பாரதியும் பெண்விடுதலையும்

☆ நீர் கண்டுகளித்த ஓர் இயற்கைக் காட்சி
(காலைக்காட்சி அல்லது மாலைக்காட்சி)

புள்ளிகள் 20